[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 6

முற்பகல் 11–15

இதேபோன்று உயர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அரசு உறுப்புக் கல்லூரிகளிலும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் தற்போது காலியாக உள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்ப நான் முடிவெடுத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு உறுப்புக் கல்லூரிகளில் முதற்கட்டமாக 500 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்படும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் இளநிலை விரிவுரையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இவர்களுக்கு முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இதேபோன்று தமிழகத்தில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் காலிப் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்பிடவும், முதல் கட்டமாக, 300 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்பிடவும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியும், உயர் கல்வியும் மேலும் உயர்ந்திட உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை அளித்தல்

* **திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஆட்சியினுடைய கவனத்தை நான் கவர விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இரண்டு நாட்களாக பரவலாக மழை பொழிந்ததில் வெள்ளப் பெருக்கு பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களிலே கட்டடங்கள் இடிந்து இருக்கின்றன. நேற்றைய செய்திப்படி தொலைக்காட்சியிலே கேட்டபோது 13 பேர் இறந்திருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அரசுக்கு இதுகுறித்து மேலும் தகவல் வந்திருக்கும். அப்படி வந்திருந்தால் இந்த வெள்ள நிவாரணத்திலே, ஜனங்கள் படுகின்ற கஷ்டத்திலிருந்து மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

இறந்து போன குடும்பங்களுக்கு ஏதாவது உதவித் தொகை அளிக்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா? 13 பேருக்கு மேல் இறந்திருக்கிறார்களா என்பது குறித்து அரசு ஒரு விளக்கமோ அல்லது அறிக்கையோ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதுகுறித்து சிவபுண்ணியம் போன்றவர்கள் கவன ஈர்ப்பாக, சிறப்புக் கவன ஈர்ப்பாக என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ எடுத்துக்கொள்வேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் வந்திருக்கின்றேன். இறந்தவர்களின் எண்ணிக்கை, (குறுக்கீடு) இதுவரை மாநிலம் முழுவதிலும் இறந்தவர்களின் எண்ணிக்கை @10 ஆகும். ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, தேவைப்படுகின்ற உதவிகளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் செய்யுமாறு ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இந்த மழைக்குச் சம்பந்தப்பட்ட சம்பவங்களில் காயம் அடைந்தவர்களில் தீவிரக் காயம் உள்ளவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாயும், இலேசான காயங்கள் அடைந்தவர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உரிய பதிலை நான் சொல்கிறேன். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் பிறகு முடிவு சொல்கிறேன்.

@ மாண்புமிகு முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க திருத்தப் பெற்றது.